5 ஜூலை 2020

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பொதுக்காலம் 14 ஆம் ஞாயிறு

மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்

மாதாந்திர கருப்பொருள்:

**நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்**

## யாருடைய தர நிலைகளால்?



ப பல நூறு ஆண்டுகளாக, கடவுளால் வாக்களிக்கப்பட்ட மெசியா வருவார் என்று யூதமக்கள் காத்துக்கொண்டிருந்தார்கள். அவர் ஒரு மாபெரும் அரசராக அல்லது அரசியல் தலைவராக வருவார் என்றும் எதிர்பார்த்திருந்தார்கள். இன்றைய முதல் வாசகத்தில், இறைவாக்கினர் செக்கரியா வரவிருக்கும் மெசியா எப்படி இருப்பார் என்று அவர்களுக்கு காட்சிப்படுத்துகிறார்.

வாக்களிக்கப்பட்ட மெசியா நிச்சயமாக ஒரு அரசராக, வெற்றிவீரராகவும், அதே நேரத்தில் தாழ்ச்சி நிறைந்தவராக, அமைதியை தருபவராகவும் இருப்பார் என்று அறிவிக்கிறார். இன்றைய பதிலுரைப்பாடலும் இதை, மிக அழகாக எடுத்துரைக்கிறது. " ஆண்டவர் இரக்கமும், கனிவும் உடையவர்; எளிதில் சினம் கொள்ளாதவர்; பேரன்பு கொண்டவர்.

இயேசு கிறிஸ்து இந்த உலகில் வந்தவுடன், இந்த சாயல்கள் அனைத்தும் உண்மையாக இருந்தன. அவர் வழியாக, மனித இனம் கடவுளின் இரக்கத்தையும் மாபெரும் நன்மையையும் அறிந்து அனுபவித்தது. கிறிஸ்துவும், வாழ்வின் "புதிய" வாழ்க்கை முறையையும் மனித குலம் வாழ வேண்டிய "மாறுபட்ட" வாழ்க்கையையும் வாழ்ந்து காட்டினார். இதன் பொருள் என்னவென்றால், அவருடைய சீடர்களாகிய நாமும் அவருடைய போதனைகளின்படியும், அவர் காட்டும் தர நிலைகளின்படியும் வாழ நாம் ஒவ்வொரு முயற்சிகளையும் எடுக்கவேண்டும் என்றும் அழைக்கப்படுகிறோம். இதைவிட்டு வேறுபட்ட வாழ்க்கை வாழ்ந்தால், நாம் அவரைப் பின்பற்றுபவர்கள் என்று அழைத்துக்கொள்ள முடியாது. இதைத் தான் புனித பவுல் இவ்வாறு கூறுகிறார். "கிறிஸ்துவின் ஆவியைக் கொண்டிராதோர் அவருக்கு உரியோர் அல்ல; "

இன்று கிறிஸ்துவின் சீடர்களாகவும், சாட்சிகளாகவும் திகழ்கின்ற நாம், நம்மையே கேட்டுக்கொள்வோம்: " கிறிஸ்து எனக்காக வகுத்துதந்த "வாழ்க்கை முறை" மற்றும் "தர நிலைகளின்" படி நான் வாழ்ந்து இந்த உலகிற்கு நிரூபிக்கின்றேனா? நம் ஆண்டவர் மனத்தாழ்ச்சியுடன் வாழ்ந்து காட்டிய அதே அன்பையும், இரக்கத்தையும் நானும் வாழ்ந்து காட்ட வேண்டாமா?

கிறிஸ்துவுக்கு மனித குலத்தை நன்றாகவேத் தெரியும். கேட்போரின் எண்ணங்களில் பேசுவதைவிட, அவர்களின் இதயத்தோடும் பேசினார். இதனால், மனித குலம் இயேசு மற்றும் தந்தையின் அன்பையும், அவர்கள் மனித குலத்தோடு கொண்டிருந்த அன்பையும் அனுபவிக்க உதவியது. அன்பு என்றால் என்னவென்று அவர் தம்முடைய போதனைகளின் வழியாகவும், உயிரைத் தந்ததின் வழியாகவும் எடுத்துக் காட்டினார். நாம் தகுதியற்றவர்கள் என்றாலும், இயேசு செய்ததைப் போல நாமும் செய்ய நம்மை இந்த உலகிற்கு அனுப்பினார். ஆவியில் வாழ்ந்து அவர் விரும்பும் தர நிலைகளின்படி வாழ்ந்தால், நாம் காட்டும் அன்பின் வழியாக நாம் கிறிஸ்துவர்கள் என்று உலகம் அறிந்துகொள்ளும். ✝

**எனக்குப் பதிலாக இறந்தவரே, என் தேடலின் நோக்கம்; எனக்காக உயிர்த்தவரே என் ஒரே ஆசை.**

– புனித அந்தியோக்கு இஞ்ஞாசியார்

### இன்றைய வாசகங்கள்:

செக்: 9: 9-10

திருபா: 145: 1-2, 8-11, 13-14

உரோ: 8: 9, 11-13

மத்:11: 25-30

### வாரம் ஒரு வசனம்

இயேசுவைப் போல அன்பு செய்ய நம்மைக் கடவுள் இவ்வுலகிற்கு அனுப்பியுள்ளார்



*Published by:* Peninsular Malaysia Pastoral Team
api@archkl.org



**மினவுதல் மாதா தேவாலயம்**
85 A, ஜலான் யாம் துவான், 70000 சிறம்பான்
தொ.பே. 06-762 4468 /763 4934/767 7542
தொ.நகல்: 06-767 7544
Email: serembanvisitaion@gmail.com
Website: www.visitationseremban.org
பங்கு குருவானவர்: மறைதிரு. சேவியர் அண்ட்ரூ
உதவி பங்கு குருவானவர்: மறைதிரு. கென்னத் கோபால்

*2020 ஆம் ஆண்டின் கருப்பொருள்*

***மகிழ்ச்சியுடன் குணமளிக்க அனுப்பப்பட்டோம்***

*2020 ஜுலை (ஆடி) மாதத்தின் கருப்பொருள்:*

***நான் அவர்களை உலகிற்கு அனுப்பினேன்***

**பங்கு அலுவலக நேரம்**
திங்கள் - வெள்ளி: காலை 8.30 - மாலை 5.30
சனி: காலை 8.30 - மாலை 7.30
ஞாயிறு: காலை 8.30 - பகல் 3.00
(ஒவ்வொரு சனி, ஞாயிறு திருப்பலி நடைபெறுவதற்கு 30 நிமிடத்திற்கு முன் ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படும். (குருவானவருக்கு நேரம் இருந்தால்)



**இவ்வாரத்தின் நிகழ்ச்சி நிரல்: பொதுக்காலம் 14ஆம் ஞாயிறு 04 – 05 ஜூலை 2020**
செக் 9: 9-10 தி.பா: 145: 1-2, 8-9, 10-11, 13-14 உரோ 8: 9, 11-13 மத்தேயு 11: 25-30
**“என் கடவுளே, என் அரசே ! உம்மைப் புகழ்ந்து ஏத்துவேன்.” ” தி.பா : 145**

நிரந்த குடியுரிமை மற்றும் வெளி நாட்டுதொழிலாள சகோதர சகோதரிகளே! அரசாங்கத்தின் வழிமுறைப்படி மறு அறிவிப்பு வரும் வரை, நீங்கள் ஆலயத்திற்கு வந்து திருப்பலியில் கலந்துகொள்ள இயலாது என்பதை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

1) 12-07-2020( ஞாயிறு): காலை 9.00 மணி - தேமொ/ காலை 9.00 மணி ( மாண்டரின்) (தேமொழி) அதிச மரிய பொண்டா, சிக்காமட்(சோன்3) & அதிச ஹாத்தி குடுஸ் (சோன் -13) மாண்டரின் மொழியில் கலந்துகொள்ள இணையத்தின்வழி பதிந்துகொள்ளவும்.

   https://forms.gle/7jmnCXvYi4kUMrVk6

2) 19-07-2020 (ஞாயிறு) காலை 8.00 (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்)
   **தமிழ்: அதிசக்கள்:** பு.சிசிலியா(சோன் -8) பு.டைட்டஸ் & ஏஞ்சலா (சோன் -10) பு.ததேயு (சோன்-11) பு.ஹென்றி (சோன்12) பு. ஜேம்ஸ் / கிளமெண்ட் / மோனிக்கா( சோன்13) பு.பெர்னடின் 1,2,3,4 / ஜோன் போல் 2, புருனோ 1,2,3/ பு. கெத்ரீன்/ எஸ் 2 ஹைட்ஸ் (சோன் 16)
   **ஆங்கிலம்: அதிசக்கள்:** பு. ஜோசப்/அல்பர்ட்/மார்கரெட் (சோன் 1) பு. அம்ப்ரோஸ்/ஹிலாரி 2/ஃபெபியன்/ குபெர்டின் ஜோசப்/பேசில் (சோன் 3) பு. மேரி/ஜோன்/கிறீஸ்டோபர்/ஜோர்ஜ் (சோன் 6), பு. ரோபர்/ஸ்டீபன்/தீமோத்தி (சோன் 7) பு. மார்த்தா (சோன்10) பு. ததேயுஸ்/மேத்யூஸ்/ஜோசப் (சோன் 11)

3) **26-07-2010( ஞாயிறு)** காலை 8.00 மணி (தமிழ்) காலை 11.00 (ஆங்கிலம்) விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

குறிப்பு:
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கட்டாயம் முகக் கவசம் அணிந்திருக்க வேண்டும். தயவு செய்து உங்களுக்கான முகக்கவசத்தை உடன் கொண்டு வரவும்.
2) ஆலயத்திற்கு திருப்பலி தொடங்குவதற்கு ஒன்றரை மணி (1 1/2 ) நேரத்திற்கு முன்னதாக வர வேண்டும். பதிவு மற்றும் இதர தயாரிப்புகள் செய்வதற்கு இது தேவைப்படுகிறது.

**நிலையான ஒழுங்குமுறை நடவடிக்கைகள் (SOP)**
1) திருப்பலியில் பங்கெடுக்க வருபவர்கள் கொடுக்கப்பட்டுள்ள வழிமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும்.
2) திருப்பலிக்கு வருபவர்கள் தங்களுடைய அடையாள அட்டையை உடன் கொண்டுவர வேண்டும்.
3) கொடுக்கப்பட்டுள்ள வரைமுறைகளில் நீங்கள் இடம்பெற்றிருந்தாலும், உங்களுக்கு சளி , காய்ச்சல், இருமல், மூச்சு தொடர்பான பிரச்னைகள் இருந்தால் திருப்பலியில் பங்கெடுக்க வர வேண்டாம்.
4) முக கவசம் அணிதல்/ பெயர் பதிவு/ வெப்ப நிலை சோதித்தல் / சுத்திகரிப்பு தெளிப்பானைக் கைகளில் பூசிக்கொள்ளுதல் ஆகியவை ஆலயத்திற்கு உள்ளே வரும்போதும், வெளியே செலும்வோதும் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டியவை.
5) திருப்பலியில் பங்கெடுக்க வரும் ஒவ்வொருவருக்கும் எண் எழுதப்பட்ட ஒரு அட்டை தரப்படும். திருப்பலிக்குப் பின் அதை அதற்குரிய இடத்தில் மீண்டும் ஒப்படைக்க வேண்டும்.
6) தற்போது ஒப்புரவு அருளடையாளம் வழங்கப்படாது என்பதைக் கவனத்தில் கொள்ளவும்.
7) இருக்கைகளில் குறிப்பிட்ட இடத்தில் மட்டுமே அமர வேண்டும்.
8) தொடுதல்/ அணைத்தல்/கைகுலுக்குதல் ஆகியவை தடை செய்யப்பட்டுள்ளது. நற்கருணை கைகளில் மட்டுமே வழங்கப்படும்.
9) கழிவறைகளைப் பயன்படுத்தும்போது தூய்மையைப் பேணுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். சமூக இடைவெளியைக் கடைப்பிடித்தல் அவசியம்.
10) திருப்பலிக்குப் பின் உடனடியாக ஆலயவளாகத்தை விட்டு செல்லுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

பங்கு அலுவலகம் திங்கள் முதல் வெள்ளி வரை காலை 9.00 - 5.30 வரை மற்றும்
சனிக்கிழமை காலை 9.00 - பகல் 1.30 வரை திறந்திருக்கும்

குழந்தையைப் போல் குணம் உள்ளவர்களாக இருங்கள்

அன்புள்ள சகோதர சகோதரிகளே!, கடவுளோடு கொண்டுள்ள உறவை மேம்படுத்திக்கொள்வதற்கு அறிவுத்திறன் மட்டும் போதாது. அவரைப் பற்றிய ஆச்சரியத்துடன் கூடிய சரணடைதலைக் கொண்டிருந்தால் மட்டுமே அவரோடு ஒன்றித்திருக்க முடியும். கடவுளோடு நாம் நெருக்கமான உறவுகொண்டிருக்க வேண்டுமென்று தந்தை கடவுளை இயேசு நமக்கு அறிமுகப்படுத்தினார். மத்தேயு: 11:28
**“பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே, எல்லாரும் என்னிடம் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.** “ இந்த வார்த்தைகள் முழுமையாக நம்முடைய சரணடைதலைக் காட்டுகிறது. நம்முடைய அனைத்துப் போராட்டங்களுக்கு மத்தியிலும், நாம் இறைவனின் நம்பிக்கைக் கொள்வோம். ஏனென்றால், அவர் கூறுகிறார்: **“என் நுகம் அழுத்தாது. என் சுமை எளிதாயுள்ளது. “**

**ஆசீரும் அமைதியும் உங்களுக்கு உரித்தாகுக! அன்புடன்: அருட்பணி: சேவி & கென்னத்**

நடமாட்டக் கட்டுப்பாட்டு நேரத்தில் (2020 மார்ச் 18 - 28 ஜுன்) வரை பெறப்பட்ட காணிக்கைகள்:

| பங்கு காணிக்கை | பங்கு காணிக்கை | தியான இல்லம் | பமமேகு உணவு வங்கி |
|---|---|---|---|
| மொத்த தொகை: | **RM 37,836.00** | **RM 16,188.00** | **RM 6825.00** |

*உங்களின் அனைத்து வகையான பங்களிப்புகளுக்கும் மிக்க நன்றி.*
*இறைவன் உங்களை நிறைவாய் ஆசீர்வதிப்பாராக!*

**நன்கொடை / காணிக்கைகள்**
**கீழ்க்கண்டவற்றில் எதற்கு நன் கொடை அல்லது காணிக்கை செலுத்துகின்றீர்கள் என்று குறிப்பிடவும்:**

(1) பங்கின் நிதி
(2) திருப்பலி கருத்துகள்
(3) ஆராதனை அறை சீரமைப்பு
(4) பமமேப உணவு வங்கி

**உங்களுடைய தொகையை இணையத்தின்வழி பங்கின் வங்கிக் கணக்கில் செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம். விவரங்கள் :**

1.வங்கியின் பெயர்: **Public Bank Berhad**
2.வங்கிக் கணக்கில் உள்ள பெயர்:: **Church of Visitation**
3.வங்கிக் கணக்கு எண்: **3121194612**

**பணம் செலுத்தியபின் எதற்கு நீங்கள் பணம் செலுத்தினீர்கள் என்பதை குறிப்பிட மறவாதீர்கள்:**

**(i) தொகை (ii) என்ன காராணம்:**
**(1) பங்கின் நிதி காணிக்கை**
**(2) திருப்பலி கருத்துகள் (பெயர்) - ஆன்ம இளைப்பாற்றி, நன்றி, அல்லது தனிப்பட்ட கருத்துகள்**
**(3) ஆராதனை அறை சீரமைப்பு**
**(4) பங்கு மனித வள மேம்பாட்டின் உணவு வங்கி ( கூடுதல் தகவல்களுக்கு: ஜோன் டேவிட்சன் (017-615 8961) அல்லது பெர்னதெத் (012- 2715840)**

**பங்கு அலுவலக குறிப்புகளுக்காக, நீங்கள் பணம் செலுத்திய ரசீதை பங்கின் மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்கவும்.** serembanvisitation@gmail.com

*மரித்த ஆன்மாக்களுக்காக மன்றாடுவோம்.*
1. டொறீன் எங் இறப்பு: 30-06-2020
2. ஹு செபாங் இறப்பு: 03-07-2020

*முடிவில்லாத ஒளி இவர் மேல் ஒளிர்வதாக*